**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06-ஆம் நாள் திங்கட்கிழமை**

**இடைக்கால மனு எண். 2/2020**
**இன்**
**அசல் வழக்கு எண். 33/2020**

சாம்ராஜ் .... மனுதாரர்/வாதி

**/ எதிர் /**

1.கருப்பையா
2.ஆனந்தவள்ளி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 12.03.2026 தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரையை எதிருரையாக ஏற்றுக்கொள்ள பாவித்தும், அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராகியுள்ள நிலையில், 2ம் எதிர்மனுதாரர் சம்மன் சார்பு ஆகாத நிலையில் தோன்றாத்தரப்பினராகியும், மனுதாரர் தரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

**1.** இம்மனுவில் மனுதாரர் தரப்பில் சிபிசி ஆர்டர் 26, ரூல் 9ன் கீழ் தாவா சொத்தின் அடி அளவுகளை அளவீடு செய்வதற்கு ஏதுவாக மானாமதுரை தாலுகா சர்வேயர் உதவியுடன் கிராம நிர்வாக அலுவலர் தாவா புலத்திற்கான வருவாய்துறை ஆவணங்களுடன் தாவா சொத்தை புலத்தணிக்கை செய்து தாவா சொத்தின் அளவீடுகள், இயற்கை அமைப்பு, சொரூபநிலை, உண்மைதன்மை ஆகியவற்றை புகைப்பட நிபுணரின் உதவியோடு புகைப்படங்கள் எடுத்து, வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்திட நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் கிரையம் வாங்கியுள்ள புல எண்.65/5 க்கு செல்வதற்கு புல எண்கள்.65/1, 65/2, 65/3, 65/4 சி, 65/4இ3 ஆகியவற்றின் தென்புறத்தில் செல்லும் தாவா கிழமேல் 10 அடி அகல பொதுப்பாதையை கடந்த 25 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தி வருவதாகவும், தாவா பாதை வழியாக மட்டுமே மனுதாரர் கிரையம் வாங்கியுள்ள புலஎண்.65/5 க்கு செல்ல இயலும் என்றும், இந்நிலையில் தாவா புலஎண்.65/4 சி, 65/4 இ 3 ஆகியவற்றின் தென்புறத்தில் செல்லும் கிழமேல் பொதுப்பாதையை மறைத்து 04.06.2020 ம் தேதி 1 ம் பிரதிவாதி முள்வேலியும், 2 ம் பிரதிவாதி கல்வேலியும் அமைத்துள்ளதாகவும், இதனால் மனுதாரர் நிலமான புலஎண்.65/5 க்கு செல்வதற்கு பாதை இல்லாததோடு, புலஎண்.65/6 க்கும் செல்ல இயலாதநிலை உள்ளதாகவும், தாவா சொத்தின் தற்போதைய சொரூபநிலையை நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே மூத்த வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து தாவா சொத்தின் அடி அளவுகள், இயற்கை அமைப்பு, சொரூபநிலை, உண்மைத்தன்மை ஆகியவற்றை கே.கே.பள்ளம் குரூப் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மானாமதுரை தாலுகா சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து புலத்தணிக்கை செய்தும், புகைப்படங்கள் எடுத்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை எதிருரையாக ஏற்றுக்கொண்ட வகையில் எதிருரையின் சுருக்கம் :**

இந்த 1 ம் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை அனைத்தையும் மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், வாதி பிரஸ்தாபிப்பது போல் புலஎண்.65/4 சி மற்றும் புலஎண்.65/4இ3-லும் எந்த காலத்திலும் ஸ்தலத்திலும் எவ்வித பாதையும் எப்போதும் இல்லை என்றும், இந்த எதிர்மனுதாரர் வாங்கிய 04.05.1994 கிரைய பத்திரத்தில் பாதைக்கும் வடக்கு என கண்டிருப்பதும் மேற்படி பாதையும் புலஎண்.65/4 சில் இல்லை என்றும், வாதி கூறும் பாதையும் புலஎண்.65/4 சி–க்கு தெற்கே தான் உள்ளதே தவிர புலஎண்.65/4 சி–ன் வழியாக பாதை இல்லை என்றும், அதேபோல் பிரதிவாதியின் புலஎண்.65/4 சி–க்கு கிழக்கே உள்ள புல எண்.65/4 இ 3–லும் யாதொரு பாதையும் வருவாய்துறை பதிவேடுகளிலும் இல்லை என்றும், மேற்படி புலஎண்ணிற்கு கிழக்கே வாதிக்கு பாத்தியமான

புலஎண்.65/5 மற்றும் 65/6 க்கு தாவா சொத்தின் வழியாக பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்ய யாதொரு உரிமையும் சட்டப்படி இல்லை என்றும் தாவா மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையை எதிருரையாக ஏற்றுக்கொள்ள பாவித்தும், அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராகியுள்ளார்.

**5. இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

5.1. இந்நிலையில் இவ்வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு மனு சொத்தை பார்வையிட்டு அளந்து அதன் அமைப்புத்தன்மையை (physical features) தாக்கல் செய்தால் தான் இவ்வழக்கில் முறையாக முடிவு செய்ய இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

5.2. மேலும் எந்தெந்த சூழ்நிலைகளில் வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டும் என்ற மேன்மை பொருந்திய மதுரை உயர்நீதிமன்ற வழக்கை "**The Madurai Bench of Madras High Court, Dated.26.09.2019, CORAM:THE HONOURABLE MR.JUSTICE N.ANAND VENKATESH, CRP PD (MD) NO.970 OF 2012 and MP(MD) No.1 of 2012**" கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5.3. எனவே மூத்த வழக்கறிஞர் திரு.A.கருப்பையா, **B.Com.B.L.,** அவர்களை வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து மனுச்சொத்தை பார்வையிட்டு, வருவாய்த்துறை ஆவணங்கள் மற்றும் இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மானாமதுரை தாலுகா சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை புலத்தணிக்கை செய்தும், அளவீடுகள் செய்தும், தாவா சொத்தில் தற்போதைய அளவுகள், இயற்கை அமைப்பு, சொரூபநிலை, உண்மைத்தன்மை ஆகியவற்றை புகைப்படம் எடுத்து வரைபடத்துடன் கூடிய தெளிவான அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

மேலும் மனுதாரர் வழக்கறிஞர் ஆணையாளர் கட்டணமாக ரூ.10,000/- இம்மனு உத்தரவு தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் வழக்கறிஞர் ஆணையர் வசம் வழங்கி அதற்குரிய ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக வழக்கறிஞர் திரு.A.கருப்பையா, B.Com.B.L., அவர்களை இந்த வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து மனுச்சொத்தை பார்வையிட்டு 30.04.2026-ம் தேதிக்குள் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு இம்மனு செலவுதொகையின்றி அனுமதிக்கப்படுகிறது. அழைக்க:-30.04.2026.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஏப்ரல் 06-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.06 17:15:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதார்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.06 17:15:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No. 2/2020**
**in**
**OS. No.33/2020**

**Dated: 06.04.202**